செ.வெ.எண் : 19/பிப்ரவரி நாள்: 10.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**
**முஸ்டக்குறிச்சி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 111 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 9 இலட்சத்து 4 ஆயிரத்து 984 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டத்திற்குட்பட்ட முஸ்டக்குறிச்சி கிராமத்தில் இன்று (10.02.2016) நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் 111 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 9 இலட்சத்து 4 ஆயிரத்து 984 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 4 பயனாளிகளுக்கு ரூபாய் 6ஆயிரத்து 694 மதிப்பில் சக்கர நாற்காலி, காதொலிக்கருவி மற்றும் பார்வையற்றோர் மடக்குக்குச்சிகளையும், மாவட்ட தாட்கோ அலுவலகத்தின் மூலம் தொழில்திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூபாய் 2 இலட்சம் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவியினையும், வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பாக 1 பயனாளிக்கு ரூபாய் 53 ஆயிரம் மதிப்பில் மானியத்துடன் கூடிய விதை விதைக்கும் கருவியையும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பாக 1 பயனாளிக்கு ரூபாய் 1 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான பெருங்கடனுதவியையும், வேளாண்மைத்துறையின் சார்பாக 2 பயனாளிகளுக்கு மொத்தம் ரூபாய் 12 ஆயிரத்து 400 மதிப்பில் மானியத்துடன் கூடிய ஆஸ்பி விசைத்தெளிப்பான்களையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூபாய் 10 ஆயிரத்து 350 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும், மாவட்ட தொழில்மையத்தின் மூலம் 10 பயனாளிகளுக்கு புதிதாக தொழில் துவங்க ரூபாய் 28 இலட்சத்து 66 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளையும், கமுதி வட்டாட்சியர் அலுவலகத்தின் மூலம் 16 பயனாளிகளுக்கு ரூபாய் 2 இலட்சத்து 43 ஆயிரத்து 540 மதிப்பிலான விலையில்லா வீட்டுமனை ஒப்படை பட்டா ஆணைகளையும், சமூக நலத்துறையின் சார்பாக 26 பயனாளிகளுக்கு ரூபாய் 12 இலடசத்து 37 ஆயிரம் மதிப்பில் திருமணத்திற்கு விலையில்லா 4 கிராம் தங்கம் மற்றும் திருமண நிதியுதவிகளையும், புதுவாழ்வுத்திட்டத்தின் கீழ் 41 பயனாளிகளுக்கு ரூபாய் 30 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான கடனுதவிகளையும், கமுதி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் சார்பாக 6 பயனாளிகளுக்கு ரூபாய் 30 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் என மொத்தம் 111 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 9 இலட்சத்து 4 ஆயிரத்து 984 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி பேசியதாவது :**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து மக்கள் மேம்பாட்டு திட்டங்களும் கடைக்கோடியில் உள்ள ஏழை, எளிய மக்களுக்கு சென்றடையும் வகையில் மாவட்ட நிர்வாகம் முழுமையாக செயல்பட்டு வருகிறது. மாதந்தோறும் ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு அரசு அலுவலர்கள் கிராமத்திற்கு நேரிடையாக சென்று பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று அவற்றிற்கு உடனடி தீர்வு காணும் விதமாக மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாமில் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு விளக்கி கூறப்படுகிறது. இம்முகாம்கள் நடத்தப்படுவதன் மூலம் கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் சாலைவசதி, குடிநீர் வசதி, பள்ளிவசதி, பேருந்து வசதி இதுபோன்ற எண்ணற்ற வசதிகள் குறித்த பொது மனுக்களும் மற்றும் திருமண நிதியுதவி, முதியோர் உதவித்தொகை, புதிய குடும்ப அட்டை, பட்டா மாற்றம் இதுபோன்ற தனிநபர் மனுக்களுக்கும் உடனடியாக தீர்வு காணவேண்டும் எண்ணும் நோக்கத்தில் தான் இம்முகாம் இங்கே நடைபெறுகிறது.

கிராமங்களில் உள்ள மக்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் குப்பைகள், கழிவுநீர் தேங்காத வண்ணம் பராமரித்திட வேண்டும். சாலையோரங்கள், பொது இடங்களில் அதிகமான மரங்களை வளர்க்க வேண்டும். கிராமப்புறங்களில் வசிக்கும் பொதுமக்கள் வெளிப்புறங்களில் மலம் கழிப்பதை அறவே தவிர்க்க வேண்டும் என்பதற்காகவும், சுகாதாரமான தமிழகத்தினை உருவாக்கிட வேண்டும் என்பதற்காவும் தமிழக அரசு ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் கிராமத்திற்கு தேவையான தனிநபர் கழிப்பிட வசதி, ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கழிப்பிட வசதிகள் செய்து தர தயாராக உள்ளது. பொதுமக்கள் மலம் கழிப்பதற்கு திறந்த வெளிகளை பயன்படுத்தாமல் இத்திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசினார்.

தொடர்ந்து முஸ்டக்குறிச்சி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்கன்வாடி குழந்தைகளுக்கு வழங்கும் சத்துணவின் தரம் குறித்து ஆய்வு செய்தார். குழந்தைகளிடத்தில் பரிவுடன் நடந்து கொள்ள அங்கன்வாடி பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இம்முகாமில் பரமக்குடி சார் ஆட்சியர் டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் எம்.முருகசெல்வி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. கல்யாணசுந்தரம், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் வி.ராமையா, தாட்கோ மாவட்ட மேலாளர் கே.செல்வராஜ், மாவட்ட தொழில்மைய பொதுமேலாளர் பி.மாரியம்மாள், புதுவாழ்வுத் திட்ட அலுவலர் டி.ஜெரோம், ஊராட்சிமன்றத் தலைவர் திரு.மாரிச்சாமி உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**